# பாரம்பரிய கலைகளுக்குப் புத்துயிர்

முஹம்மது ஃபைரோஸ்

அனைத்து வித கலைகளுக்கான சிறந்த தளத்தை சிங்கப்பூரில் உருவாக்க மூன்றாவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட 'சமர்ப்பணா' எனும் ஆசிய பாரம்பரிய நடன விழா வெற்றிகரமாக நடந்தேறியுள்ளது.

ராஃபிள்ஸ் ஹோட்டலில் கடந்த 5, 6, 7 ஆகிய தேதிகளில் நடந்த இவ்விழாவில் சிங்கப்பூர் கலைஞர்களுடன் இந்தியக் கலைஞர்களும் இணைந்து மனதைக் கவரும் வண்ணம் பல சிறப்பு நிகழ்ச்சிகளை விழாக்கோலத்துடன் விமரிசையாகப் படைத்தனர்.

ஆவலுடன் காண வந்திருந்த பார்வையாளர்களால் அரங்கமே நிறைந்திருந்தது.

ப்ரியா சகோதரிகளின் இசைக் கச்சேரி, பெங்களூரு அபிநவா குழுவின் பாரம்பரிய நாட்டியம் போன்றவை கண்ணுக்கும் காதுக்கும் விருந்தளித்தன.

சிறப்பம்சமாக, பல உயரிய விருதுகளைக் குவித்துள்ள நடன மணிகளான நிருபமா, ராஜேந்திரா இரட்டையரின் நடன அமைப்புகள், பளபளப்பான ஆடை அணிகலன்கள், கவர்ச்சிகர ஒளிஒலியமைப்பு எல்லாம் ஒன்றிணைந்து பார்வையாளர்களைப் பரவசத்தில் ஆழ்த்தின.

இந்தியாவிலும் பிற நாடுகளிலும் இது வரை 2,500க்கும் மேற்பட்ட இசைக் கச்சேரிகள் படைத்துள்ள ஆந்திராவின் ஷண்முகப்ப்ரியா, ஹரிப்ரியா சகோதரிகள், கான மழை பொழிந்தனர்.

முதல் முறையாக இந்த விழா நிகழ்ச்சியில் ப்ரியா சகோதரிகள் அபிநவா நடனக் குழுவுடன் சேர்ந்து 'சமர்ப்பணா' விழாவுக்கு மேலும் புத்துயிர் ஊட்டியுள்ளனர்.



சமர்ப்பணாவில் அபிநவா நடனக்குழு. **படம்: ஜேட் குரூப் இன்டர் நேஷனல்**

வழக்கமான தென்னிந்திய, வட இந்திய பார்வையாளர்களோடு, மலாய், சீன, இனத்தவர், மேற்கத்தியர் என்று பற்பல இன மக்களும் வந்து அரங்கிற்குப் புது மெருகூட்டினர்.

சிங்கப்பூரின் 'WeCanDoIt' மற்றும் ஸ்ருதிலயா நடனக் குழு, பெங்களூருவின் முட்ரிக்கா அற நிறுவனம் ஆகிய அமைப்புகள் ஒன்றிணைந்து, இந்தியாவில் பாயும் 'கங்கை' எனும் புனித நதி பற்றிய புராணக் கதையை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்ட நாட்டிய நாடகமான 'தாரா' என்ற படைப்பை மாறுபட்ட பாணியில் புதுவிதமாக, விழாவின் இறுதி நாளான 7ஆம் தேதியன்று படைத்தனர்.

mohdfair@sph.com.sg